**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.**

**முன்னிலை :** செல்வி. சே.தா. ஆயிஷ் பேகம், பி.ஏ., பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, செய்யாறு.

2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 22ம் நாள் புதன்கிழமை

**இடைநிலை மனு எண்.1/2023-ன் அசல் வழக்கு எண்.275/2013**

திரு.ஜெயராமன் .....மனுதாரர்/வாதி

**/எதிர்/**

1. திரு. பெருமாள், த/பெ. திரு. ராகவன்.
2. திரு. கண்னன், த/பெ. திரு. ராகவன்.
3. திரு. காசி, த/பெ. திரு. ராகவன்.
4. திருமதி. மல்லிகா, க/பெ. திரு. சேட்டு.
5. திரு. ராஜேந்திரன், (இறந்துவிட்டார்), த/பெ. திரு. படவேட்டான்.
6. திரு. காட்டுராஜா, த/பெ. திரு. படவேட்டான்.
7. திரு. நாகராணி, த/பெ. திரு. நாராயணன்.
8. திரு. அப்பு, த/பெ. திரு. ராமு.
9. திரு. பவாணி, க/பெ. திரு. சிவா (இறந்துவிட்டார்).
10. திரு. பவித்ரா, த/பெ. திரு. சிவா (இறந்துவிட்டார்)
11. திரு. அபிலாஷ், த/பெ. திரு. சிவா (இறந்துவிட்டார்).
12. திரு. சோமசேகர், த/பெ. திரு. அண்ணாசாமி.
13. திரு. ரமேஷ், த/பெ. திரு. அண்ணாசாமி.
14. திரு. தியாகராஜன், த/பெ. திரு. அண்ணாசாமி.
15. திரு. அமராவதி, க/பெ. திரு. ஆதிகேசவன்.
16. திரு. ஜெயசீலன், த/பெ. திரு. ஆதிகேசவன்.
17. திரு. கண்ராயன், த/பெ. திரு. ஆதிகேசவன்.
18. திரு. மணிகண்டன், த/பெ. திரு. ஆதிகேசவன்.
19. திரு. ஐயப்பன், த/பெ. திரு. ஆதிகேசவன்.

.....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 15.11.2023 தேதியன்று என்முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரா்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞா் திரு.ஜெ.ராமகிருஷ்ணன், அவா்கள் முன்னிலையாகியும், 1 முதல் 9 வரையிலான மற்றும் 12 முதல் 14 வரையிலான எதிா்மனுதாரா்/ பிரதிவாதி ஒருதலைபட்சம் ஆக்கப்பட்டும், 10 மற்றும் 11ம் எதிா்மனுதாரா்கள் இளையவராக இருந்து பின்னா் பெரும்பான்மை வயது அடைந்த நபா்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்டும் அவா்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டு ஆஜராகவில்லை என்று ஒருதலைபட்சமாக்கப்பட்டும் 15 முதல் 19 வரையிலான எதிா்மனுதாரா்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞா் திரு.எம்.எஸ்.சங்கரபாண்டியன், அவா்கள் ஆஜராகி இருதரப்பு வாதங்கள் கேட்டு மனுக்கள் ஆவணங்களைப் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச், கட்டளை 6 விதி 17ன் கீழ் மனுதாரா்/வாதி பிராதில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரரின் மனு சுருக்கம்**:-

மனுதாரா் இவ்வழக்கில் வாதி. மேற்படி தாவாவில் 5ம் எதிா்மனுதாரா்/பிரதிவாதி திரு.ராஜேந்திரன் ஆரம்பத்திலேயே கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிா் வியாஜ்ஜியம் செய்யாததாலும் அவா் மீதும் கனம் நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்சமாக உத்திரவு செய்யப்பட்டுள்ளது. 5ம் எதிா்மனுதாரா்/பிரதிவாதி திரு.ராஜேந்திரன், இந்த தாவா பாகப்பிரிவினைக்கான தாவா என்பதாலும் காலம் சென்ற 5ம் எதிா்மனுதாரா்/பிரதிவாதியின் சட்டபூா்வ பிரதிநிகளை தாவாவில் சோ்க்காமல் விலக்கு அளித்து மனுதாரா் தாவாவை தொடா்ந்து நடத்த அனுமதி அளிக்ககோரி இடை மனு எண். ஐ.ஏ.எண்.353/2018 தாக்கல் செய்து நீதிமன்றத்தால் 10.07.2023-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது எனவே அதுகுறித்து தாவாவில் இம்மனுவில் கண்டுள்ளவாறு, திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 15ம் **<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 16 முதல் 19வரையிலான எதிர்மனுதாரர்களால் ஏற்க்கப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>:-**

(i) மனுவில் கண்டுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் வன்மையாக மறுக்கிறார்கள் 5ம் பிரதிவாதியான திரு.ராஜேந்திரன் 21.12.2017 அன்று காலமாகிவிட்டார். அவரது வாரிசினை தாவாவில் சேர்க்காமல் விளக்கு அளிக்க கோரி இடை மனு 353/2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. 5ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உள்ள 1/8 பாக உரிமையை அவரது சட்டப்பூர்வ பிரதிநிதிகளான அவரது குமாரர் சிரஞ்சீவி, அரிகிருஷ்ணன், விஜய், பிரதாப் ஆகிய நால்வர் அடைய பாத்தியப்பட்டவர் என்று திருத்தம் செய்யவேண்டும் என்று கோரி மனுதாக்கல் செய்துள்ளார். ஆனால் அவர் சட்டப்படியான வாரிசுகளை தாவாவில் சோர்ப்பதில் இருந்து விளக்கு அளித்ததே பாகப்பிரிவினை வழக்கில் சட்டவிரோதமானது ஆகும். இவ்வெதிர்மனுதாரர் விளக்கமாக இடை மனு எண். 353/2018ல் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகளில் எவரேனும் ஒருவருக்கு ஒருதலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் அவர் இறந்துவிட்டார், அவருடைய சட்டப்படியான வாரிசுகளை வழக்கில் சேர்க்கப்படவேண்டும். பிரதிவாதிகளில் ஒருவர் எதிர் வழக்குரையை தாக்கல் செய்த பிறகு இறந்துவிட்டிருந்தால் அவரது வாரிசுகள் அந்த வழக்கில் சேர்க்கப்படும்போது ஏற்கனவே அவர் தாக்கல் செய்திருந்த எதிர் வழக்குரைக்கு எதிராக அவருடைய வாரிசுகள் தாக்கல் செய்ய முடியாது. ஆனால் வாரிசுகளையே இந்த வழக்கில் சேர்க்க தேவையில்லை என்பது ஏற்ப்புடையது அல்ல.

(ii) மேலும் பாகப்பிரிவினை வழக்கில் இறந்துபோன பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பாகம் எதுவுமில்லை எனும் பட்சத்தில் அவருடைய வாரிசுகளை இந்த வழக்கில் உரிய பார்ட்டிகளாக சேர்க்க வேண்டியதில்லை. ஆனால் மனுதாரர்/வாதியே தாவா சொத்தில் 5ம் பிரதிவாதிக்கு 1/8 பாகம் பாத்யதை என்று கூறிவுள்ளார். அந்த 1/8 பாகம் அவருடைய வாரிசுகளாகிய சிரஞ்சிவி, அரிகிருஷ்ணன், விஜய், பிரதாப் ஆகிய நால்வரும் அடையவேண்டுமென்று இருக்கும் பட்சத்தில் முதல்நிலை தீர்ப்பாணை உரிய பார்ட்டியாக சோர்க்காமல் எவ்வாறு தீர்ப்பாணை பிறப்பிக்க முடியும் என்பதை எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தெரியப்படுத்திக்கொள்கிறார்கள். உரிய தரப்பினராக இல்லாத பட்சத்தில் அவர்களுக்குண்டான பங்கினை எவ்வாறு பிரித்துக்கொடுக்க முடியும் என்பதனை நீதிமன்றம் கருத்தில் கொள்ளவேண்டும் எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல, செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர் உரை தாக்கல்.

4. மனுதாரரின் மனு, எதிர்மனுதாரரின் எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றினை பரிசீலனை செய்ததில் இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதி இறந்துவிட்டதாக அவர் உயிருடன் இருந்த காலத்தில் சம்மன் சார்வு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார் என்றும் அவரது சட்டப்படியான வாரிசுகளை தாவாவில் சேர்ப்பதில் இருந்து விளக்களிக்க கோரி இடை மனு 353/18 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் இம்மனு தாவாவில் உரிய திருத்தம் மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எனவே இம்மனுவினை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கினை பாகப்பிரிவினை வழக்கு என்றும் வாரிசுகளை சேர்க்காமல் இருக்க மனு அனுமதிக்கப்பட்டுள்ளது தவறு என்றும் இறுதிநிலை தீர்ப்பாணையில் முறையாக பாகம் பிரிக்க இயலாது என்றும் எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்யுமாறும் வாதிட்டார்.

7) **<u>தீர்வு :-</u>**

இருதரப்பு வாதங்கள், மனு, எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்ததில், இந்த மனுவின் மனுதாரர்/வாதி தாவாவில் உரிய திருத்தம் மேற்கொள்ள வேண்டி இம்மனுவை தாக்கல் செய்தார். எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் பாகப்பிரிவினை வழக்கில் பாகஸ்தர்கள் அனைவரும் தரப்பினர்களாக சேர்க்கவேண்டியது அவசியம் என்றும் எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபிக்கப்பட்டுள்ளது.

8) மேற்படி வழக்கு கோப்பினை ஆராய்கையில் 5ம் பிரதிவாதியின் சம்மன் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்நிலை ஆகவில்லை எதிர் வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. எனவே தோன்றாதரப்பாக்கப்பட்டுள்ளார். இந்நீதிமன்றம் இடை மனு எண். 353/2018ல் மனுதாரர் 5ம் பிரதிவாதிகளின் சட்டப்படியான வாரிசை வழக்கில் சேர்க்காமல் இருக்க விலக்கு அளிக்க கோரி

தாக்கல் செய்திருந்த மனுவினை பரிசீலனை செய்து அனுமதி அளித்துள்ளது. இவ்வெதிர்மனுதாரர்கள் அம்மனுவின் உத்தரவின் பேரில் எந்தவிதமான மேல் நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு நீதிமன்றத்தில் உத்தரவினை ஏற்றுக்கொண்டுவிட்டு தற்போது இம்மனுவின் எதிருரையில் மேற்படி உத்தரவு சட்டவிரோதமானது என கூறியுள்ளது ஏற்க்கத்தக்கதல்ல.

9) மேலும் கட்டளை 22 விதி 4(4) உரிமையியல் நடைமுறை சட்டம் படியாக மனுவில் இந்நீதிமன்றம் உரிய உத்தரவு ஏற்கனவே பிறப்பித்துள்ளது. மேலும் உரிமையியல் நடைமுறைசட்டம் கட்டளை 22 விதி 4(4)ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நீதிமன்றம் எப்போதெல்லாம் தகுந்தது என்று நினைக்கிறதோ அப்போது வாதியானவருக்கு, நீதிமன்றத்தில் ஆஜராகாமல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்த பிரதிவாதிகளையோ அல்லது எதிர் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு வழக்கு நடத்த ஆஜராகாமல் ஒருதலைபட்சமாக்கப்பட்ட பிரதிவாதி இறந்தபிறகு அவரது வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதிலிருந்து விலக்கு அளிக்கலாம். மேலும் அம்மாதிரியான சூழ்நிலைகளில் தீர்ப்புரையை இறந்த பிரதிவாதிகளுக்கு எதிராகவும் வழங்கலாம். அந்த தீர்ப்பானது இறந்த பிரதிவாதி உயிருடன் இருந்த காலத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பாக கொள்ளப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

10) மேற்படி இந்நீதிமன்றம் 5ம் பிரதிவாதியின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்ப்பதில் இருந்து மனுதாரருக்கு விலக்கு அளித்துள்ளது. அதன் அடிப்படையில் ஏற்கனவே இந்நீதிமன்றம் இடைநிலை மனு எண்.353/18ல் விரிவாக உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் அம்மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் மனுதாரர் பிராதில் உரிய திருத்தம் மேற்கொள்ள இம்மனு தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் தாவாவில் திருத்தம் மேற்கொள்ள அனுமதி அளிக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நீதியின் நலன்பால் அனுமதிக்க உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. மனுவின் தன்மை மற்றும் தரப்பினர்களின் உறவுமுறையை கருத்தில் கொண்டு மனுவின் செலவுத்தொகையை உபயதரப்பினர்கள் அவர் அவர்களே ஏற்கவேண்டியது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு, செலவுத்தொகை இன்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு

என்னால் நேரடியாக பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் நாளான இன்று இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-**

- இல்லை -

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:-**

- இல்லை -

(ஒம்). சே.தா. ஆயிஷ் பேகம்,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு.